DITTO WS

Reg. No. : ......................................

Name : ..........................................

**FY-12**

# FIRST YEAR HIGHER SECONDARY EXAMINATION, MARCH 2020

Part – II

**TAMIL**

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

***General Instructions to Candidates :***

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

**1 முதல் 4 வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. மதிப்பெண் 1 வீதம்** **(4 × 1 = 4)**

1. மருமக்கள் வழி மான்மியம் என்னும் நூலை எழுதியவர்.
   (அ) பாரதியார் (ஆ) பாரதிதாசன்
   (இ) கவிமணி (ஈ) திரு.வி.க.

2. வெண்டாமரை என்னும் பண்புத்தொகை எவ்வாறு பிரியும் ?
   (அ) வெண் + டாமரை (ஆ) வெண் + தாமரை
   (இ) வெண்டா + மரை (ஈ) வெண்மை + தாமரை

3. நமது பாடப் பகுதியில் அமைந்துள்ள மூன்றாம் உலகப் போர் நாவலின் மையக் கரு
   (அ) இயற்கை அழகு (ஆ) சுற்றுச்சூழல் மாசு
   (இ) உலக அமைதி (ஈ) போரின் விளைவு

4. ஆற்றுதல் என்பது
   (அ) அலர்ந்தார்க்கு உதவுதல் (ஆ) பாடு அறிந்து ஒழுகுதல்
   (இ) போற்றாரைப் பொறுத்தல் (ஈ) தன்கிளை செறாமை

**5 முதல் 7 வரையிலான அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. மதிப்பெண் 2 வீதம் .** **(3 × 2 = 6)**

5. உவமை என்றால் என்ன ? பால் போன்ற நிலா என்பதில் உவமானம், உவமேயம், உவமை உருபு போன்றவற்றை எடுத்து எழுதுக.

DITTO WS

6. இலக்கிய உலகில் புதிய கொள்கையின் வெளிப்பாடான நவீனத்துவம் முன்வைக்கும் கருத்துகளில் இரண்டினை எழுதுக.

7. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"
"செல்வத்துப் பயனே ஈதல்" இவ்விரு கவிதை வரிகள் வெளிப்படுத்தும் தமிழர் பண்பாடுகள் எவை ?

**8 முதல் 12 வரையுள்ள எவையேனும் 3 வினாக்களுக்கு விடை எழுதுக. 3 மதிப்பெண் வீதம்** **(3 × 3 = 9)**

8. கீழக்காணும் பகுதியை வாசித்துக் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.
"சங்க அகப்பாடல்கள் காதலையே பாடு பொருளாகக் கொண்டாலும் காதலின்பத்தைவிடக் காதல் வயப்படுவதால் ஏற்படும் அவலங்களையே மிகுதியாகப் பாடுகின்றன. அகப்பாடல்கள் 'பெண்களின் கண்ணீர்த் துளிகள்' என்று கூறினாலும் தவறு இல்லை. தற்காலத்திலும் நல்ல படைப்புகள் பலவும் அவலச் சுவையையே முன் வைக்கின்றன. ".
(அ) 'பெண்களின் கண்ணீர்த் துளிகள்' எனக் குறிப்பிடப்படும் பாடல்கள் எவை ?
(ஆ) சங்க அகப்பாடல்களின் பாடுபொருள் என்ன ?
(இ) தற்காலப் படைப்புகளில் காணப்படும் சுவை எது ?

9. ஏதேனும் ஒன்றிற்குக் குறிப்பு வரைக.
(அ) தற்குறிப்பேற்ற அணி (ஆ) வஞ்சப் புகழ்ச்சி அணி

10. பெண்ணியம் என்றால் என்ன ? பெண்களுக்கு அளித்திட வேண்டிய இரண்டு உரிமைகளை எடுத்துக் கூறுக.

11. "மலையார் சாரல் மகவுடன் வந்த மடந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்"
– இவ்வரிகள் காட்டும் குற்றால அழகை விவரித்துக் கூறுக.

12. சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் முன் நாம் அறிந்துகொள்ள வேண்டியவற்றைப் பட்டியலிடுக.

**13 முதல் 17 வரையுள்ள எவையேனும் 3 வினாக்களுக்கு விடை எழுதுக. 4 மதிப்பெண் வீதம்** **(3 × 4 = 12)**

13. கொடுக்கப்பட்ட தலைப்புகளில் ஏதேனும் ஒன்றை சிற்றிதழில் வெளியிடும் வண்ணம் பெட்டிச் செய்தியாக எழுதவும்.
(அ) தெய்யம் (ஆ) படையணி (இ) தெருக்கூத்து

14. "பூக்களுக்கு மட்டுமேன் புகழாரங்கள்
இதழ்கள் உதிர வசாழ்வைத் தொலைத்து
விதையாய் புதைந்த பிறகு"
– திலக பாமாவின் இக் கவிதை வரிகளுக்கு விமரிசனக் குறிப்பு வரைக.

DITTO WS

15. பள்ளி இலக்கிய மன்றத்தைத் துவக்கி வைத்திட வருகை தர இருக்கும் சிற்பி பாலசுப்பிரமணியம் அவர்களுக்குப பாராட்டுரை தயார் செய்க.
(சாகித்திய அகாதமி விருது பெற்றவர், மொழி பெயர்ப்பாளர், இதழாசிரியர்)

16. தூய தமிழில் எழுதுக.
"இந்த நாள் வரைக்கும் இந்த மண்ண நம்பியே இருந்துட்டோம் எஜமான். இதை விட்டா வேற வேலையும் தெரியாது. இனிமே எம்புண்ணு புள்ளையங்களையும் கரையேத்தனும், இது நாள் வரை ஒளச்சதுக்கு ஏதோ நீங்களே பாத்து நஷ்ட ஈடு மாதுரி ஏதாவது குடுத்தா உங்க கண்ணு பார்வையிலேயே கெடந்து பொளச்சக்குவோம்."

17. பள்ளி மாணவர் இயக்கம் சார்பாக நீர் நிலைகளை மாசுபடுத்துவோருக்கு எச்சரிக்கை விடுக்கும் பொருட்டு ஒலிபெருக்கி அறிவிப்பு தயார் செய்க.

**18 முதல் 21 வரையுள்ள வினாக்கள் எவையேனும் 3 க்கு விடை எழுதவும். மதிப்பெண் 5 வீதம். (3 × 5 =15)**

18. பொங்கல் விழாப் பேச்சுப் போட்டியில் பங்கேற்க "நல்ல கலைகளை நாளும் வளர்ப்போம்" என்ற தலைப்பில் உரைக் குறிப்பு தயார் செய்க.

19. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் பயன்படுத்தி வாழ்க்கை வரலாற்றுக் கட்டுரை எழுதுக.

| | |
|---|---|
| பெயர் | – சி. வை. தாமோதரம் பிள்ளை |
| பிறப்பு | – 12-9-1832, இலங்கை-யாழ்ப்பாணம் |
| கல்வி | – பட்டப் படிப்பு, தமிழ் இலக்கிய இலக்கணம் |
| பணி | – ஆசிரியர் பணி, பத்திரிகை ஆசிரியர், இலக்கிய மொழி பெயர்ப்பாளர், கல்லூரி திட்டக் குழு உறுப்பினர், முறை மன்ற நடுவர், உரையாசிரியர், பதிப்பாசிரியர் |
| பதிப்பித்த நூல்கள் | – தொல்காப்பியம், வீரசோழியம், நீதிநெறி விளக்கம் இன்னும் பல. |

20. "தோல் பதனிடும் தொழிற்சாலையின் வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தான் வெள்ளையன். அவன் கைபட்டு செழித்துக் குலுங்கிய நிலமா இது? எவ்வளவு மாற்றம்" மண்மொழி சிறு கதையில் வரும் இவ்வரிகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.

21. 'இலக்கியங்களில் நகைச்சுவை' என்னும் தலைப்பில் பள்ளி இலக்கியக் கருத்தரங்கில் வாசிக்கக் கட்டுரை தயார் செய்க.

**22 முதல் 26 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 3 க்கு விடை எழுதவும். மதிப்பெண் 6 வீதம். (3 × 6 = 18)**

22. மகளிர் தின சிறப்புப் பட்டி மன்றத்தில் பேசிட பெண்களுக்கான உரிமைகள் கிடைக்கின்றன / கிடைப்பதில்லை என்னும் தலைப்புகளில் ஏதேனும் ஓர் அணி சார்பாகப் பேசிட குறிப்புகள் தயார் செய்க.

23. கீழேக் கொடுக்கப்பட்டுள்ள கவிதையினை நயம் பாராட்டி எழுதுக.
“நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து
நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தைக்
கோலமுழுதும் காட்டி விட்டாற் காதல்
கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ? வானச்
சோலையிலே பூத்த தனிப்பூவோ நீதான்
சொக்க வெள்ளிப் பாற்குடமோ அமுத ஊற்றோ!”
- பாரதிதாசன்.

24. நல்ல திரைப் பாடல்களும் சிறந்த இலக்கியங்களே என்ற கருத்தைச் சுட்டிக் காட்டும் வண்ணம் “திரைப் பாடல்களில் பல்சுவைகள்” என்னும் தலைப்பில் தமிழ்ப் புத்தாண்டு தினத்தில் பேசிட தொலைக்காட்சி உரை தயார் செய்க.

25. உங்கள் ஊராட்சி மன்றம் சார்பாக நடைபெறவிருக்கும் கலைவிழாவில் கலைநிகழ்ச்சி நடத்திட வருகை தரும்படி வில்லுப்பாட்டுக் கலைஞர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

26. கீழக்காணும் கவிதையில் வெளிப்படும் அழகியலை விவரிக்க.
“பாறைகளைச்
சிற்பமாக்குகிற பழக்கம்
இதன் அலை நுணுக்கும்
பகல்களில் நகரும் ஓவியம்
இரவுகளில் தொலைதூரக் காற்றின்
நாதசுரத்துக்கு அசையும்
பாதசரம்”

**27 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் 2 க்கு குறிப்புகளைப் பயன்படுத்தி 2 பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை எழுதுக. 8 மதிப்பெண் வீதம் (2 × 8 = 16)**

27. கண்ணையும் கருத்தையும் கவரும் இயற்கை அழகினை ‘எழில் கொஞ்சும் இயற்கை’ என்னும் தலைப்பில் சுற்றுச் சூழல் மாத இதழில் வெளியிட வருணனைக் கட்டுரை தயார் செய்க.
[அலைவீசி ஆடும் ஆறு, நுரை எழுப்பிக் குதிக்கும் மலையருவி]

28. நமது நாட்டுப்புறக் கலைகளை உலகம் அறியும் வண்ணம் மின்னிதழில் பதிவேற்ற “கலை சிறந்த நாடு” என்னும் தலைப்பில் விளக்கக் கட்டுரை எழுதுக.
[ஒயிலாட்டம், வில்லுப் பாட்டு, தெருக்கூத்து, படையணி]

29. ‘அனுபவமே ஆசான்’ என்ற பொன் மொழிக்கிணங்க கல்விப் பயணங்களால் நமக்கு ஏற்படும் அனுபவ அறிவை தொகுத்து எழுதுக.
[கலைகள், பண்பாடு, உணவு முறை, நில அமைப்பு, மொழி......]

---